24.04.2026 பி.வா.சா.2 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 240 /2015 ) திரு.முருகன்.

<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 8 வது வரை படித்துள்ளேன். வாதி என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரியுமா என்றால் தெரியாது. என்னை நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க என்னை எம்பெருமாள் தான் அழைத்து வந்தார் என்றால் சரிதான். நான்என்ன வேலை செய்கிறேன் என்றால் ஓட்டுநர்வேலை செய்கிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் நான் வார்டு செயலாளர், எனது மனைவி ஒன்றிய கவுன்சிலர் என்று சொல்லியிருப்பதற்கும் வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரிதான். வாதியின் வீட்டிற்கு கிழக்கு பக்கம்உள்ள வீட்டி நான் குடியிருப்பதாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரையதாரார்கள் எனது அப்பாவுடன் பிறந்தவர்கள் என்று சொல்லுவதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண்.729/5 சந்து புறம்போக்கு சந்து என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பிரதிவாதி தாக்கல் செய்துள்ளார். ஏற்கனவே சர்வே எண்.729/5 ஐ பொறுத்துகோமதிக்கும், நயினாருக்கும் இடையே ஒரு வழக்கு நடைபெற்றுவந்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பெருமாள் கோனாரும், சொக்கக்கோனாரும் வாதிக்கு எழுதிக்கொடுத்த பத்திரத்தில் கண்ட அளவுகள் சரிதான் என்றால் சரிதான் என்று சொல்ல முடியாதுஅதுதவறு. பத்திரத்தில் உள்ள அளவுகள் தவறு என்று நானோ, பிரதிவாதிகளோ சொல்லுவதற்கு அளவுகள் சம்பந்தமாக வழக்கு எதுவும் தாக்கல்செய்துள்ளேனா என்றால் நான் தாக்கல் செய்யவில்லை. எனது தகப்பனாருடன் பிறந்தவர்கள் எழுதிக்கொடுத்த பத்திரத்தில் கண்ட அளவுகள் தவறாக இருந்திருந்தால் நானோ எனதுஉறவினர்களோ வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றால் சரியல்ல. நான் குடியிருந்து வருவது எனது தகப்பனாருக்குரியது என்றால் சரிதான். அதன் அளவுகள் சரியானது என்றால் ஆமாம். சர்வே எண்.729/5 நான் கூறும் சந்தானது திருநெல்வேலி - மதுரை செல்லும் தேசிய நெடுஞ்சாலையை சென்று அடையும் என்று சொன்னால் ஊரிலிருந்து தேசிய நெடுஞ்சாலையை அடையக்கூடிய ரோட்டை அடையும். இந்த வழக்கு சம்பந்தமாக தாவாச்சொத்தை அளக்க நீதிமன்ற ஆணையர் வந்த போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன்.

2) வழக்கறிஞர் ஆணையர் தாவா இடத்தை பார்வையிட்டு அளந்து அவ்வறே அறிக்கை தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.எனது நிருபண வாக்குமூலம் பாரா 4 முதல் 7 வரையிலான சங்கதிகள் ஸ்தலத்தில் அமையவில்லை என்றால் சரியல்ல. வாதி கோமதியின் வீட்டின் கீழ்பக்கம் சுவரும், எனது வீட்டின் மேல்பக்கம் உள்ள சுவரும் பொதுச்சுவர் என்பதால் மேற்படி பொதுச்சுவர் பிரச்சனை சம்பந்தமாக வாதியிடம் வீண் விவகாரம் செய்து அவருக்கு எதிராகவும்,பிரதிவாதிகளுக்கு ஆதரவாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நானும்,வாதியும் அருகஅருக வீடு என்பதால் வாதிக்கு எதிராகவும்,சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.11 ஆவணத்திற்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> - இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
24.04.2026.